# ஞானஸ்நானம் பெற வேண்டியது யார்?

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்படி கேட்கின்ற சிலர் ஞானஸ்நானம் பெறத் தயாரானவர்களாய் இருப்பதில்லை, மற்றும் பிறர் ஞானஸ்நானத்தில் தாங்கள் அடைய வேண்டிய மாற்றங்களை ஏற்கனவே அடைந்திருப்பதால் ஞானஸ்நானம் பெறத்தேவையில்லை என்று மறுத்து விடுகின்றனர்.

## ஞானஸ்நானம் பெறுவதற்கு ஒருவர் தயாராவது எப்பொழுது?

பதின் பருவ (teen age) வயதை அடையாத பிள்ளைகள் ஞானஸ்நானம் பெற விரும்பும் பொழுது, ஞானஸ்நானம் கொடுப்பவர்கள் எப்பொழுதுமே கவலையடைகின்றனர். வேதாகமம், ஞானஸ்நானம் பெற விரும்புபவரின் வயது பற்றி சட்டம் எதையும் விதித்ததில்லை. இயேசு பன்னிரெண்டு வயதில் எருசலேம் தேவாலயத்திற்குச் சென்றதால் (லூக். 2:42) பிள்ளைகளும் அவர்களின் பன்னிரெண்டு வயதில் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும் என்று சிலர் எடுத்துரைத்துள்ளனர். அவ்வேளையில் அவர் (இயேசு) தம் தாயிடத்தில், "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?" (லூக். 2:49) என்று கேட்டார்.

இருப்பினும் இயேசு பன்னிரெண்டு வயதில் ஞானஸ்நானம் பெறவில்லை, ஆனால் தம் ஊழியத்தைத் தொடங்குவதற்குச் சற்று முன்னதாக முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்றார் (லூக். 3:23). இந்த விஷயத்தில் இயேசு நமது முன்மாதிரியாக இருப்பதில்லை, ஏனென்றால் அவர் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. ஞானஸ்நானம் பெறுவதற்குத் தேவையானவற்றை அவர் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது: தேவ வசனத்தில் போதிக்கப்படுதல் (யோவா. 6:45), இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் (யோவா. 8:24), பாவத்திலிருந்து மனந்திரும்புதல் (அப். 17:30) மற்றும் இயேசுவை அறிக்கையிடுதல் (ரோமர் 10:9, 10) போன்றவற்றை அவர் செய்ய வேண்டியதில்லை. இங்கு கேள்வி என்பது வயது அல்ல, ஆனால் புரிந்து கொள்ளுதல், கணக்கொப்புவிக்க வேண்டியது மற்றும் விருப்பம்

ஆகியவற்றைப் பொறுத்ததாகவே உள்ளது. இளம் மக்கள் மாறுபட்ட வயதுகளில் பக்குவம் அடைகின்றனர்.

ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்கின்றவர்களிடத்தில் அவர்கள் தயார் நிலையில் உள்ளனரா என்று தீர்மானிப்பதற்குக் குறைந்தபட்சம் பின்வரும் சில கேள்விகளைக் கேட்கலாம்:

1. நீங்கள் ஏன் ஞானஸ்நானம் பெற விரும்புகின்றீர்கள்?
2. நீங்கள் ஒரு பாவியா? உங்கள் பாவத்திற்காகத் தேவன் உங்களைத் தண்டிப்பார் என்று அஞ்சுகின்றீர்களா?
3. உங்கள் பாவங்களினிமித்தம் நீங்கள் தேவனை விட்டுப் பிரிக்கப் பட்டுள்ளதாக நம்புகின்றீர்களா?
4. தேவன் இப்பொழுதே உங்களுக்குத் தீர்ப்பளிக்க வேண்டி யிருந்தால், அவர் உங்களைப் பரலோகத்திற்கு அழைத்துக் கொள்வாரா அல்லது நரகத்திற்கு அனுப்புவாரா?
5. உங்களைக் குறித்து தேவனுடைய எண்ணப்போக்கு என்னவாக உள்ளதென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? உங்கள் பாவங்களினி மித்தம் அவர் உங்களைவிட்டுத் தம் முகத்தை மறைக்கின்றார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
6. இயேசு யாராயிருக்கின்றார் என்று நீங்கள் விசுவாசிக்கின்றீர்கள் (யோவா. 8:24; ரோமர் 10:9)?
7. இன்று நீங்கள் மரித்தால், நீங்கள் ஒரு பாவியாகவே மரிப்பீர்களா (யோவா. 8:21)?
8. மனந்திரும்புதல் என்றால் என்ன?
9. உங்கள் பாவங்களை மன்னிக்க இயேசு என்ன செய்திருக்கின்றார் (மத். 26:28)? உங்கள் பாவங்களை மன்னித்து அவற்றைக் கழுவுவது எது (எபி. 9:22; வெளி. 1:5)? இது எப்பொழுது நடைபெறுகின்றது?
10. நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, இப்பொழுது வாழ்வதைக் காட்டிலும் எவ்விதம் மாறுபட்ட வகையில் வாழ்வீர்கள்?
11. உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?
12. நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு, இயேசு உங்கள் வாழ்வில் கர்த்தர் ஆவாரா? இயேசு உங்கள் கர்த்தராக இருப்பதன் அர்த்தம் என்ன?
13. நீங்கள் ஞானஸ்நானம் பெற்றிருக்கும் பொழுது எந்த சபையில் பிரவேசிப்பீர்கள்?
14. புது வாழ்வைத் தொடங்க நீங்கள் தயாராயிருக்கின்றீர்களா?

தாம் பாவியாய் இருப்பதை உணருகின்ற ஒரு நபர் தமது பாவங்களினி மித்தமாகத் தாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டுள்ளதை நம்புகின்றார். தமது பாவங்களை மன்னிக்கின்ற இரத்தத்தையுடைய இயேசுவில் அந்த நபர் கர்த்தர் என்றும் மீட்பர் என்றும் நம்பிக்கை கொண்டால், அந்நபர்

இயேசுவைப் பின்பற்றுவதற்காகத் தமது வாழ்வை மாற்ற மனதுள்ளவராய் இருந்தால், தேவனுடனான தவறான உறவை நேர்ப்படுத்திக் கொள்வது அவசியம் என்று அவர் உணர்ந்தால், அவர் ஞானஸ்நானம் பெறத் தயாராய் இருக்கின்றார். அவர் தம் பாவங்கள் மன்னிக்கப்படும் என்பதையும் மற்றும் அவர் தேவனுடனும் சக கிறிஸ்தவர்களுடனும் ஐக்கியத்தினுள் பிரவேசிப்பார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றுள்ளவரைப் பற்றிய விஷயம் என்ன?

ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்றுள்ள சிலர், தாங்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது என்ன செய்தனர் என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாது இருந்தாலும் தாங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதாக நம்புகின்றனர். அவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது தேவனுடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளாதிருந்தால், வசன ரீதியான ஞானஸ்நானத்தின் அவசியத்தைப் பற்றிக் காண்பதற்கு அவர்களுக்குப் பின்வரும் கேள்விகள் உதவலாம்:

1. நீங்கள் முழுக்காட்டப்பட்டீர்களா?
2. ஞானஸ்நானம் பெற்ற பொழுது உங்கள் வயது என்ன?
3. நீங்களாகவே வேதாகமத்தைப் படித்திருந்தீர்களா?
4. உங்கள் சபையில் பிரசங்கிக்கப்பட்ட மற்றும் போதிக்கப்பட்ட வற்றிலிருந்து ஞானஸ்நானத்தைப் பற்றி நீங்கள் அறிந்துள்ளதைக் கற்றுக் கொண்டீர்களா?
5. உங்களை ஞானஸ்நானப் படுத்திய பிரசங்கியார் எந்த நாமகரணக் கூட்டத்தைச் சேர்ந்தவர்?
6. சுவிசேஷக் கூட்டமொன்றின் போது நீங்கள் முன் சென்றீர்களா?
7. நீங்கள் அவ்வாறு முன் சென்ற பொழுது என்ன நடந்தது என்று விவரிக்கவும். மற்றவர்கள் உங்களுடன் ஜெபித்தார்களா? யாரேனும் ஒருவர், உங்களை "பாவிகளின் ஜெபம்" என்று அவர் அழைக்கும் ஜெபத்தை நீங்கள் ஜெபிக்கும்படி கூறினாரா?
8. சபையாருக்கு முன்பாக நீங்கள் பின்வருவது போன்ற அறிக்கை செய்தீர்களா?: "கிறிஸ்துவினிமித்தமாகத் தேவன் என் பாவங்களை மன்னித்துள்ளார் என்று நான் விசுவாசிக்கின்றேன்." அப்படிச் செய்திருந்தால், நீங்கள் இதைச் செய்த பிறகு இரட்சிக்கப்பட்டதாகக் கருதுகின்றீர்களா?
9. நீங்கள் இரட்சிக்கப்பட்டுள்ளதற்காக மக்கள் அகம் மகிழ்ந்து உங்களைப் பாராட்டுகின்றனரா? எந்த வேளையில் இதை அவர்கள் செய்தனர்?
10. நீங்கள் சபையாருக்கு முன்பாகச் சென்ற பொழுது உங்கள் ஆவிக்குரிய நிலையைப் பற்றிப் பிரசங்கியார் அறிவித்தது என்ன?
11. இதற்கு எவ்வளவு காலத்திற்குப் பிறகு நீங்கள் ஞானஸ்நானம்

பெற்றீர்கள்?

12. நீங்கள் ஏன் ஞானஸ்நானம் பெற்றீர்கள்?
13. இது வேதாகமத்தில் உள்ள ஒரே ஞானஸ்நானத்துடன் எவ்விதம் ஒப்பிடப்படுகின்றது (எபே. 4:5)?

நாம் பெறுகின்ற ஞானஸ்நானத்தின் செல்லும் தன்மையானது நம்மை ஞானஸ்நானப்படுத்துவரைச் சார்ந்தது அல்ல. நமது சுயபுரிந்து கொள்ளுதலும் உறுதிப்பாடும்தான் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. நாம் வேதாகமத்தின் ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றுள்ளோம் என்று நிச்சயப்படுத்திக் கொள்வது அவசியமாகும் (எபே. 4:5). பல மக்கள், ஞானஸ்நானம் என்று அழைக்கப்படுகின்ற ஒன்றைப் பெற்றுள்ளனர் ஆனால் அவர்கள் ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றிருந்ததில்லை. இந்த ஒரே ஞானஸ்நானத்தைப் பெற்றிராதவர்கள் தங்கள் பெருமையை விழுங்கி/ கீழ்ப்படுத்தி, தேவனுடைய ஒரே ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்.

G. C. ப்ரூவர் அவர்கள் பின்வருமாறு சரியாக எடுத்துரைத்தார்:

> வேத வசனம் போதிக்கின்ற முறைப்படி ஞானஸ்நானம் பெறுகின்ற ஒருவர், ஞானஸ்நானம் என்பது பாவமன்னிப்புக்காக அல்லது இரட்சிப்பின் நிலைக்காக என்பதை அறிந்திருக்க வேண்டும். இதை அவர், அறியாதிருந்தால், தவறான வாசிப்போ அல்லது தவறான வழிநடத்துதலோ ஏதோ ஓரிடத்தில் உள்ளது என்றாகின்றது.[1]

குறிப்பு

[1]G. C. Brewer, *Contending for the Faith* (Nashville: Gospel Advocate Co., 1941), 175-76.